| | | |
|---|---|---|
| சாட்சி : PW2<br>சந்திரசேகரன் | OS.253/2019 | 10.01.2024 |

**PW2– குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக லால்குடி சார்பு நீதிமன்றத்தில் AS.No.28/2019 ஆக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 31.01.2024 அன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தள்ளுபடி செய்யப்பட்டதால் மேற்படி மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு வழக்கை ராஜேஸ்வரி தான் தாக்கல் செய்துள்ளார் நான் தாக்கல் செய்யவில்லை. அ.வ.எண்.57/2017 என்ற வழக்கில் தீர்ப்பாணைக்கு எதிராக நாங்கள் மேல்முறையீடு செய்யவில்லை. 02.02.1999 ம் தேதி எனது தாயார் வழக்கு சொத்தை வாங்கும் போது நானும் உடன் இருந்தேன் அதனால் அந்த விபரம் எனக்கு தெரியும். மேற்படி சொத்தை பணம் கொடுத்து வாங்கியதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பணம் கொடுக்காததால் தான் அந்த கிரையம் 250/99 ஆனது ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணம் 250/99 ஆனது 377/2000 ன் படி 22.02.2000 ல் ரத்து செய்யப்பட்டது என்றால் நாங்கள் இல்லாமலேயே ரத்து செய்துவிட்டார்கள். எனது சகோதரியின் திருமணத்திற்கு சொத்தை விற்பதற்காக பார்க்கும் போது தான் ரத்து செய்யப்பட்டது தெரியவந்தது. மேற்படி கிரையம் ரத்து செய்யப்பட்டது எனது குடும்பத்தாருக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரையம் வாங்கியதிலிருந்து 57/2017 என்ற வழக்கு தாக்கல் செய்யப்படும் வரை எனது அம்மா பெயரில் பட்டா

எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். இந்த வழககிற்கு பின்னிட்டு 06.02.2019 ம் தேதியன்று வழக்கு சொத்திற்கு நாங்கள் அத்துமீறி வந்தோம் என்றும் பிரதிவாதிகள் தடுத்தார்கள் என்று சொன்னால் நாங்கள் எப்போதும் போல் எங்கள் இடத்தை சுத்தம் செய்வதற்கு சென்ற போது பிரதிவாதிகள் எங்களிடம் தகராறு செய்து தாக்கி பிரச்சனை செய்தார்கள். தாவா சொத்தில் கிரையத்தை அனுசரித்து நாங்கள் சுவாதீனத்தில் இல்லை என்றும் தற்போது வரை பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் தற்போது வரை எங்களது சுவாதீனத்தில் தான் வழக்கு சொத்து இருந்து வருகிறது. மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான் வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. 2019 தீர்ப்பிற்கு முன்னரே நாங்கள் பட்டா பெற்று விட்டோம். மேற்படி பட்டாவை பெற்றதற்கான உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கான விபரம் எனக்கு தெரியாது. பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருப்பது தெரிந்தும் மோசடியாக பட்டாவை பெற்றுக்கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லாததால் தான் 57/17 என்ற வழக்கினை பொறுத்து எங்களுக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் நாங்கள் சுவாதீனத்தில் இருந்ததால் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டிய தேவை இல்லை என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு அது சம்மந்தமாக மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் உள்ளதை தெரிந்து கொண்டே வேண்டுமென்றே இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானோ எனது குடும்பத்தாரோ ஒரு போதும் தாவா சொத்தை அனுபவித்தது இல்லை என்றால் தற்போது வரை எங்களதுஅனுபவத்தில் தான் உள்ளது பிரதிவாதிகள் தொடர்ந்து இடையூறு செய்து வருகிறார்கள். வழக்கு நிலுவையில் உள்ள போது தாவா சொத்து தொடர்பாக பட்டா ஏற்படுததியுள்ளது சட்டவிரோதம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நாங்கள் அனுபவித்து வருவதற்கான கிஸ்து ரசீதுகள் எதுவும் ஏற்படவில்லை என்றால் பிரதிவாதிகள் அரசியல் பின்பலத்தில் உள்ளதால் எங்களை ரசீது வாங்கவிடாமல் தடுக்கிறார்கள். பிரதிவாதிகள் ரசீது வாங்கவிடாமல் தடுத்ததற்கு அதிகாரிகளிடம் மனு கொடுத்ததற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் அனுபவத்திலேயே இல்லாததால் தான் தாவா சொத்திற்கான ரசீதுகள் எதுவும் எங்கள் பெயரில் ஏற்படவில்லை என்றும் அதை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமையோ, அனுபவமோ இல்லை என்றும் அதை ஏற்படுத்துவதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இடையூறு செய்வதாக சொல்லியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.